## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.

## அசல் வழக்கு எண். 229/2018

இன்று 2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21 ஆம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆர்.கார்த்திகேயன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : மனோகரி

தந்தை பெயர் : ராகவன்

வயது : 77

குறுக்கு விசாரணை

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நீங்கள் சொல்லிதான் வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது என்றால சரிதான். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால நான் பள்ளிகூடம் செல்லவில்லை. ஆனால் எழுதப்படிக்க தெரியும். பி.வா.சா.ஆ.11 ல் ஆங்கிலத்தில் கையெழுத்துள்ளீர்கள் என்றால் என்றால் சரிதான். தமிழ் படிக்க தெரியும் ஆங்கிலத்தில் கையொப்பம் போட தெரியும். 12.12.2018 ம் தேதி நீங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் வழக்கு ஒருதலைபட்சமாக ஆக்கப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு நீங்கள் நீதிமன்றத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் நீங்கள் உங்களுக்கு திருமணம் நடந்த விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து உங்களுடையது என்றால் சரிதான். அதில் உங்கள் பெண் பிறந்த தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ராகவன் என்பவர் பெயரில் சொத்து குறித்தோ, அந்த ஆவணங்கள் பற்றியும் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை பி.வா.சா.ஆ.15 ல் பெற்றோர் பாதுகாவலர் பெயர் என்ற இடத்தில் முருகேசன் என்று கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உங்களின் மகளின் பெயர் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகளுக்கு திருமணம் ஆனதால் அவரது பெயர் சேர்க்கவில்லை. அதில் எந்த தேதி ஏற்படுத்தப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் குடும்ப தலைவர் என்ற இடத்தில் உங்கள் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் வேலைக்கு சென்றுவிட்டதால் நான் கையொப்பம் போட்டேன். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் க.எண். குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கதவு எண் கிடையாது. பி.வா.சா.ஆ.14 ல் உள்ள கையொப்பம் உங்களுடையது என்றால் சரிதான். அதில் நீங்கள் ரமேஷ் என்பவர் மீது தெற்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு என்றால் சரிதான். 25.04.2018 ல் உங்கள் இறந்ததாக எழுதியுள்ளீர்கள் என்றால் சரிதான். தெற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தற்கு ஆதாரம் எதுவும் உள்ளது என்றால் போலீசார் ரசீது கொடுக்கவில்லை. மேற்படி பி.வா.சா.ஆ.14 ல் தாசில்தாருக்கு கொடுத்த மனுவிலும் உங்கள் கணவர் 25.04.2018 ல் அன்று இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக தாசில்தார் அலுவலகத்தில் கொடுக்கும் மனுவில் போதிய நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருப்பார்கள் என்றும் நீங்கள் தாக்கல் செய்த மேற்படி ஆவணத்தில் அவ்வாறு ஒட்டப்பட்டதாக தெரியவில்லை என்றால் அசலில் ஒட்டியுள்ளேன். மேற்படி

ஆவணத்தில் காவல் நிலையத்தில் கொடுத்த வாக்குமூலம் உங்களால் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி காவல் நிலையத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் உங்கள் திருமண தேதி மாதம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரமேஷ் என்பவர் மீது வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் நீங்கள் தாக்கல் செய்த புகார் நகலில் தெற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் உங்கள் கணவர் இறந்த தேதி 25.04.2018 என சொல்லியுள்ளீர்கள். ஆனால் உங்கள் கணவர் 26.04.2018 ல் இறந்தார் என்றால் 26.04.2018 ல் இறந்ததாக எழுதியுள்ளேன். உங்கள் கணவர் இறந்த பிறகு அவருடைய மனைவி 1ம் வாதி தங்கம்மாள்தான் இறுதி சடங்கு செய்தார் என்றும், அதனால்தான் உங்களால் இறந்த தேதி சரியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண ஆவணங்கள் பற்றி பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் உங்களுடைய எதிர் வழக்குரையில் ராகவனின் சொத்தில் விவரங்கள் ஆவணங்கள் பற்றி எதுவுல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் உங்கள் கணவருக்கு சிகிச்சைகள் முருகேசன் என்பவர் மூலமாக வழங்கப்பட்டதாக சொல்லியுள்ளீர்கள். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராகவன் பெயரில் உள்ள சொத்தின் அனுபவம் உங்களிடம் உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை. வா.சா.3 தனலெட்சுமி தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டையின் ராகவனின் சொத்து முகவரி உள்ளது என்றால் அவர் அங்கு வாடகைக்கு இருந்தார். தற்போது இல்லை. வாடகை ஒப்பந்தம் எதுவும் உள்ளது என்றால் இல்லை. ராகவனின் பெயரில் இருந்த சொத்தில் தனலெட்சுமி மகள் என்ற உரிமையில் குடியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. ரமேஷ் உங்களிடம் இருந்த சான்றுகள் அடையாள அட்டைகள் ஆகியவற்றை எப்போது உங்களிடம் வாங்கி சென்றார் என்று பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் எனது கணவர் இறந்த மறுநாள் அன்று வாங்கி சென்றார். இறப்பு சான்று பெறவேண்டி அவ்வாறு வாங்கி சென்றார். உங்களுக்கு வாதிகளை எப்போதிலிருந்து தெரியும் என்றால் தனலெட்சுமி சின்ன கைகுழந்தையாக இருக்கும்போதே தெரியும். அவர்களுக்கு நாங்கள் உதவிகள் செய்துள்ளோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உங்களுடைய படம் உள்ளது என்றால் சரிதான். தனலெட்சுமியின் மகள் பெயர் என்னவென்றால் தெரியாது. வினோதினி என்பது யார் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வினோதினிக்கு சீர் பத்திரிக்கையில் உங்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பெயர் அடித்துள்ளார்கள் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சீர் நிகழ்ச்சியில் நீங்களும் தனலெட்சுமியும் அந்த பெண்ணுடன் சேர்ந்து எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் சரிதான். உங்கள் கணவரின் சொந்த ஊர் கேரளா மாநிலம் என்றால் சரிதான். உங்கள் கணவர் கேரளாவில் இருந்தபோது தங்கமாளை முதன்முதலில் திருமணம் செய்து கொண்டார் என்றும், பின்னிட்டு அவர் கம்பம் பகுதியில் வேலைக்காக வந்தார் என்றும், அப்போது அவரின் முதல் மகள் சசிரேகா 6 வயது குழந்தையாக இருந்தார் என்றால் சரியல்ல. நீங்கள் ராகவன் ஏற்கனவே திருமணம் ஆனவர் என்று தெரிந்தும் நீங்கள் அவரை 2 வதாக திருமணம் செய்து கொண்டீர்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு ராகவன் உங்களையும் தங்கமாளையும் நல்லமுறையில் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால்தான் ராகவன் அவருடைய மகளான தனலெட்சுமியை திருப்பூருக்கு

அழைத்து வந்து உங்களுடன் ஒரே வீட்டில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. தனலெட்சுமியை அவருடைய தகப்பனார் ராகவன் நன்றாக பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல தனலெட்சுமி சசிரேகா ஆகியோர்களுக்கு அனைத்து விசேசங்களையும் அம்மாவாக இருந்து முன்னின்றி நடத்தினீர்கள் என்றால் சரியல்ல. ராகவன் உயிருடன் இருக்கும்வரை அவருடைய பெண் குழந்தைகள் மூவரையும் நன்றாக பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. ஒரே மகளான எனது மகளையும் மட்டும் பார்த்து வந்தாா. ராகவன் இறந்த பிறகு முதல் மனைவியான தங்கமாளுக்கு பாகம் கிடைக்கும் என்பதால் இந்த வழக்கில் பொய்யாக எதிர்வாதம் செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. ராகவன் இறந்த பிறகு வாரிசு சான்று வேண்டி 1ம் வாதி தங்கமாள் தாலுக்கா அலுவலகத்தை அணுகியபோது அவர்கள் 2 மனைவி இருப்பதாக சொல்லி வாரிசு சான்று மறுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு தாசில்தார் அழித்த குறிப்பாணைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1ம் வாதி ராகவனின் முதல் மனைவி என்றும் 2, 3 வாதிகள் 1ம் வாதிக்கும் ராகவனுக்கு பிறந்த குழந்தைகள் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உங்களுக்கும் ராகவனுக்கும் பிறந்த குழந்தை என்று சொன்னால் சரிதான். வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/- R.Karthikeyan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)

திருப்பூர்.